**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 255 of 2016**

**Deposition of Witness P.W.1**

| | |
|---|---|
| **Name : பழனிவேல்** | **Father/Husband's Name : அய்யனார்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 23.07.2026.**

**A1, A2 present**.

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது திண்டிவனத்தில் குடியிருந்து LandTobo Survey என்ற பெயரில் தனியார் சர்வேயராக தொழில் செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 2016ம் வருடம் சென்னையில் இருந்து கொடைகானலுக்கு தனியார் நிலத்தை சர்வே செய்துவிட்டு திரும்ப சென்னை செல்வதற்காக பழனி வந்தபோது 27.04.2016ம் தேதி இரவு 7.30 மணியளவில் நானும், அன்பு மற்றும் ஏழுமலை என்பவரும் RF ரோட்டில் உள்ள ஈஸ்வரன் ஓட்டலுக்கு சாப்பிட சென்றபோது என்னிடம் இருந்த Survey Instruments TS415 என்ற Instruments–ஐ வெளியே வைத்துவிட்டு உள்ளே சாப்பிட சென்றபோது வெளியே வந்து பார்த்தபோது மேற்படி Survey Instruments–ஐ காணவில்லை. பின்னர் அக்கம்பக்கம் தேடி பார்த்துவிட்டு பழனி நகர் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். புகார் மனு அ.சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் போலிசார் என்னுடைய Survey Instruments–ஐ மீட்டு நீதிமன்றத்தில் ஒப்படைத்தார்கள். நான் மனு செய்து இடைக்காலமாக பெற்று சென்றேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள பொருள் தான் அந்த Survey Instruments. **புகைப்படம் மற்றும் CD அ.சா.ஆ.2 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

2. நான் எந்த தேதியில் புகார் கொடுத்தேன் என்றால் 27.04.2016ம் தேதி பழனி டவுன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். இரண்டு நபர்கள்

கொடைகானலுக்கு சர்வே செய்ய சென்றதாக சொல்லியுள்ளது யார் யார் போனார்கள் என்றால் அன்பு, ஏழுமலை. அந்த நேரத்தில் நான் எங்கிருந்தேன் என்றால் சென்னையில் இருந்தேன். பழனிக்கு யார் யார் எந்த வாகனத்தில் வந்தார்கள் என்றால் பேருந்தில் அன்பும், ஏழுமலையும் வந்தார்கள். புகார் மனுவில் பழனிக்கு எதற்காக வந்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் Survey Instruments என்று மட்டும் தான் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். Survey Instruments–ன் தயாரிப்பு நிறுவனம் மற்றும் நிறம் சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் மனுவில் 27.04. என்பதில் திருத்தம் உள்ளது என்றால் ஆமாம், நான் தான் திருத்தி எழுதினேன். Survey Instruments காணாமல் போனதாக சொல்லும் நேரத்தில் நான் எங்கே இருந்தேன் என்றாலும், எத்தனை மணிக்கு தகவல் கிடைத்தது என்றாலும் நான் சென்னையில் இருந்தேன், 27.04.2016ம் தேதி இரவு 9.30 மணிக்கு தகவல் கிடைத்தது. நான் 27.04.2016ம் தேதி புகார் கொடுக்கவில்லை என்றாலும் 29.04.2016ம் தேதி பின்னிட்டு புகார் கொடுத்தேன் என்றாலும் சரியல்ல. 27.04.2016ம் தேதி ஏழுமலை, அன்பு புகார் எதுவும் கொடுத்தார்களா என்றால் இல்லை. சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எந்த பொருளும் காணாமல் போகவில்லை என்றாலும் உண்மையில் காணாமல் போயிருந்தால் அன்றே புகார் கொடுத்திருப்பேன் என்றாலும் சரியல்ல. உண்மையை மறைத்து புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

M PONPANDI Digitally signed by M PONPANDI Date: 2026.07.23 18:12:28 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 255 of 2016**

**Deposition of Witness P.W.2**

| | |
|---|---|
| **Name : அன்பு** | **Father/Husband's Name : முருகேசன்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 23.07.2026.**

**A1, A2 present**.

**<u>முதல் விசாரணை</u>**

**1. நான் தற்போது விக்கிரவாண்டி சாலையில் குடியிருந்து LandTobo Survey என்ற பெயரில் அ.சா.1 உடன் சர்வேயராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 பழனிவேல் எனது Owner. தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 2016ம் வருடம் சென்னையில் இருந்து கொடைகானலுக்கு தனியார் நிலத்தை சர்வே செய்துவிட்டு திரும்ப சென்னை செல்வதற்காக பழனி வந்தபோது 27.04.2016ம் தேதி இரவு 7.30 மணியளவில் நானும், பழனிவேல் மற்றும் ஏழுமலை என்பவரும் RF ரோட்டில் உள்ள ஒரு ஓட்டலுக்கு சாப்பிட சென்றபோது எங்களிடம் இருந்த Survey Instruments TS415 என்ற Instruments–ஐ வெளியே வைத்துவிட்டு உள்ளே சாப்பிட சென்றபோது வெளியே வந்து பார்த்தபோது மேற்படி Survey Instruments–ஐ காணவில்லை. பின்னர் அக்கம்பக்கம் தேடி பார்த்துவிட்டு பழனி நகர் காவல் நிலையம் சென்று அ.சா.1 புகார் அளித்தார். நானும், ஏழுமலையும் சாட்சி கையொப்பம் செய்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.**

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

**2. LandTobo Survey நிறுவனத்தில் எத்தனை வருடங்களாக வேலை செய்து வருகிறேன் என்றால் 5 வருடங்களாக வேலை செய்து வருகிறேன். எத்தனை மணிக்கு பணி முடித்து யார் யார் வந்தோம் என்றால் நானும், பழனிவேல், ஏழுமலை மூன்று பேரும் இரவு 7.00 மணிக்கு வந்தோம். நாங்கள் ஓட்டலுக்கு சாப்பிட்டு சென்றபோது**

எத்தனை மணி இருக்கும் என்றால் 7.30 மணி. நாங்கள் சாப்பிட்ட RF ரோடு மக்கள் அதிகம் கூடும் இடம் என்றால் சரிதான். ஓட்டலில் சாப்பிட சென்றபோது எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் தெரியவில்லை, சுமார் 20 பேர் இருக்கலாம். Survey Instruments–ஐ யார் கொண்டு வந்தார் என்றால் நான் தான் கொண்டு வந்தேன். சாப்பிடுவதற்கு முன்பு எந்த இடத்தில் வைத்தேன் என்று போலிஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் ஆமாம். சாப்பிட போன பிறகு எவ்வளவு நேரம் கழித்து வந்து பார்த்தபோது Survey Instruments காணாமல் போனது என்றால் 15 நிமிடங்கள் இருக்கும். யார் யாரிடம் விசாரித்தோம் என்றால் ஓட்டலிலும் பக்கத்தில் உள்ளவர்களிடமும் விசாரித்தோம். அதற்கு பிறகு அன்றைக்கே பழனிவேலும், ஏழுமலையும், நானும் பழனி டவுன் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். நான் சொல்வதுபோல் எந்த பொருளும் காணாமல் போகவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 27ம் தேதி எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றாலும் இரண்டு நாள் கழித்து தான் புகார் கொடுத்தோம் என்றாலும் சரியல்ல.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.07.23 18:12:37 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 255 of 2016**

**Deposition of Witness P.W.3**

| | |
|---|---|
| **Name : தயால்ராஜ்** | **Father/Husband's Name : கோவிந்தராஜ்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 23.07.2026.**
**A1, A2 present**.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது பழனியில் கம்பர் தெருவில் குடியிருந்து பெட்டி கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 2016ம் வருடம் தேதி, மாதம் ஞாபகமில்லை ஒரு நாள் மதியம் சுமார் 2.30 – 3.00 மணியளவில் நானும், சந்திரசேகர் என்பவரும் RF ரோட்டில் உள்ள அம்சவேனி ஓட்டல் அருகே நின்று கொண்டிருந்தபோது அங்கு வந்த போலிசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும், சந்திரசேகர் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். **பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

2. போலிசார் கேட்டதால் கையொப்பம் செய்தேனா என்றால் வரைபடம் வரைந்து போலிசார் கேட்டதால் கையொப்பம் செய்தேன். எத்தனை போலிசார் இருந்தார்கள் என்றால் 2 போலிசார் இருந்தார்கள். நான் கையொப்பம் செய்தபோது சுமார் எத்தனை நபர்கள் அங்கிருந்தார்கள் என்றால் 4 பேர் இருந்தார்கள். கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சம்பவயிடத்தில் வைத்து கையொப்பம் செய்யவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.07.23 18:12:43 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 255 of 2016**

**Deposition of Witness P.W.4**

| | |
|---|---|
| **Name : சந்திரசேகர்** | **Father/Husband's Name : ஆறுமுகம்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 23.07.2026.**

**A1, A2 present**.

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது பழனியில் 4வது வார்டில் குடியிருந்து Watch Repair செய்யும் தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 2016ம் வருடம் தேதி, மாதம் ஞாபகமில்லை ஒரு நாள் மதியம் சுமார் 2.00 மணிக்கு மேல் நானும், தயால்ராஜ் என்பவரும் RF ரோட்டில் உள்ள Watch கடை முன்பு நின்று கொண்டிருந்தபோது அங்கு வந்த போலிசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும், தயால்ராஜ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். **பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.4 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>**

2. போலிசார் கேட்டு கொண்டதால் தான் கையொப்பம் செய்தேன் என்றால் ஆமாம். நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.07.23 18:12:49 +0530

**நீதித்துறை நடுவர்,**

**பழனி.**